


# மரணம் வரும் வரைக்கும்

- ஒலுவில் அமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THAJUL ATHEEB
S. A. R. M. SEYED HASSAN MOULANA
"SADAAT PATH"
131 B, KINTAVUR - 12
SRI LANKA.

A. ALAWUDEEN
(Oluvil Amuthan)
No. 67 NEW MOSQUE Road
AKKARAIPATTU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் வரும் வரைக்கும்

(கவிதைத் தொகுதி)

1999

- ஒலுவில் அமுதன் -

விலை 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புத்தந்தை
மர்ஹூம் இஸ்மா லெவ்வை
மரைக்கார் ஆதம்லெவ்வை
அவர்களுக்கு இக்கவிதைத்
தொகுப்பை சமர்ப்பணம்
செய்கின்றேன்.



- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கவிதையும் ஓலுவில் அமுதனும்

ஓலுவில் அமுதன் தேசிய பத்திரிகைகளுக்கு தெரிந்த பெயர்தான். ஆதம்லெவ்வை அலாவுத்தீன் பெயர் கொண்ட இவர் 1976 தொடக்கம் எழுதிவருகிறார்.

"மரணம் வரும்வரைக்கும்" என்ற மகுடத்தில் தனது கவிதை நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் சில கவிதைகளை மட்டும் பார்வையிட்டேன்.

மரபுக்கவிதைக்கு இலக்கணம் இருக்கிறது. புதுக்கவிதைக்கு இது கிடையாது.

பத்திரிகையொன்றில் வெளிவந்த அவரது கவிதைகளில் என்னை மிகவும் கவர்ந்தது. பள்ளிவாசலில் தொழுது விட்டு வெளியேறுகிறார் கவிஞர் வெளியே அவரது செருப்புகளைக் காணவில்லை! உடனே அவருக்கு கவிதை பிறந்து விடுகின்றது.

"தொழ வந்தவன்தான்
திருடியிருக்க வேண்டும்
இல்லை ..... இல்லை
திருட வந்தவன்தான்
தொழுதிருக்க வேண்டும்" இக்கவிதையின் கருப்பொருள் நம்மைக் கவர்கின்றது. இந்த மனப்பதிவோடுதான் "மரணம் வரும் வரைக்கும்" தொகுதியில் (சில) கவிதைகளை வாசிக்கத் தொடங்கினேன். ஏன் அவர் தம் கவித்துவத்தை வளர்த்துக் கொள்ள வில்லை என்ற எண்ணமே மேலொங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசு கண்ணதாசன் ஒரு பாடலில் "எங்கே மனிதன் யாருமில்லையோ அங்கே எனக்கோர் இடம் வேண்டும்"

ஒலுவில் அமுதன் கேட்கிறார்

"பொல்லாத புவியில்

கல்லான மனிதர்களோடு

போலியுறவு கொள்வதை விட

மனிதன் இல்லாத ஊர்

இருந்தால் சொல்லுங்கள்" இரண்டு கவிஞர்களினதும் கருப்பொருள் ஒன்றுதான். மனிதன் இல்லாத இடம் ஒன்றைத்தான் வேண்டுகின்றார்கள் மனிதர்கள் மனிதர்களாக இல்லை. மனிதர்களாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை மறைமுகமாக வேண்டுகின்றார்கள். மரணம் வரும் வரைக்கும் என்ற கவிதையில் சீரிய கருத்தை வாசகர்கள் உள்வாங்க முடியும்.

அன்னை, வைத்தியன், தொண்டன் இவர்களுக்கு இணையாக நாற்காலியைப் பாடுகிறார் கவிஞர். எவ்வாறு சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்பதை அரசியல்வாதிகள் நாற்காலிகளிடம் பாடம் படிக்க வேண்டுமாம். மனிதன் மனிதனை வரவேற்க உட்கார தோள் கொடுப்பது நாற்காலி.

நாற்காலி மூலமாக மனிதனுக்கு புத்தி புகட்டுகிறார் கவிஞர்.

ஒலுவில் அமுதன் தனித்துவமானவர். தனக்குப்பட்டதை கவிதை வரிக்குள் அடக்குபவர். தற்கால கவிதை நிகழ்வை, அதன் போக்கை மேலும் இவர் அறியவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பத்தரிகைகள் ஆரோக்கியமான புதுக்கவிதைகளை பிரசுரிக்க இன்னமும் ஆயத்தப்படவில்லை. தினகரன், சாளரம், தினக்குரல் போன்ற பத்திரிகைகளிலும் தரமான புதுக்கவிதைகள் வெளிவர இன்னும் காலங்கள் செல்லும்.

ஒலுவில் அமுதன் வளரத்துடிக்கும் கவிஞராவார். அவரை மேலும் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு இலக்கிய உலகத்துக்கு இருக்கின்றது.

மரணம் வரும் வரைக்கும் மட்டுமல்ல அதற்கப்பாலும் அவரது பெயர் நின்று நிலைக்க வேண்டும். அதற்கு தகுந்தவாறு அவரது இலக்கிய முயற்சிகள் கூர்மை பெற வேண்டும் என்பதுதான் எனது பேரவா.

அன்புடன்
அன்புடீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை .....!

அன்பர்களே .....

நான் 1976 ஆண்டு இலக்கிய உலகில் காலடி வைத்தேன்.

1985ம் ஆண்டுதான் பிரபலமடைந்தேன். இருந்தும் இடையே சில வருடங்கள் ஓய்வெடுத்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். காரணம் சொந்தப் பிரச்சினைகள், குடும்பச்சுமை, வேலைப்பழு.

தினகரன், சிந்தாமணி, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளுக்கு மாத்திரமன்றி மல்லிகை தொடக்கம் பல சஞ்சிகைகளுக்கும் சிறுகதை, கவிதை, கட்டுரை என்பன எழுதியுள்ளேன்.

1986 காலப்பகுதியில் 'புதுக்குரல்' என்ற பெயரில் மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளேன்.

மீண்டும் இலக்கியப்பணி புரிய வேண்டும் என்ற அவா என் மனதை குடைந்தது.

அதன் பெறுபேறுதான் "மரணம் வரும் வரைக்கும்" என்ற கவிதைத் தொகுதி.

நான் பெரும் கவிஞனல்ல. கவிதைக்கடலில் நீந்தும் ஒரு சிறு குழந்தை. காலம் என்னை மேலும் வளர்க்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல இலக்கிய பங்களிப்பை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும்.

என்படைப்புக்களில் உண்மையை உணரலாம். தீயவற்றைப்புகழவில்லை, நல்லவற்றை மறைக்கவில்லை.

என்னைப்பற்றி இளைய புதுமுக இலக்கியவாதிகளுக்கு தெரியாமலிருக்கலாம்.

பத்திரிகைகளுக்கு மாத்திரமல்ல வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் நாடகங்களும் எழுதியிருக்கின்றேன். மெல்லிசைப்பாடல்களும் ஒலிபரப்பாகி உள்ளன.

தினகரனில் "நினைவுகள் நிஜங்களல்ல" என்ற தொடர்கதையும் எழுதியுள்ளேன். அதிகம் சொல்லிவிட்டேன் என்று நினைக்கின்றேன். மன்னியுங்கள்,

இனி.....
கவிதையை நுகருங்கள்
உங்கள் எண்ணத்தை
எனக்கு எழுதுங்கள்.

அன்புடன்

ஒலுவில் அமுதன்
(அலாவுதீன்)
67 புதுப்பள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம்

மனித உயிரின்
மதிப்பை
மிருகத்தின் நிலையை விட
கீழிறக்கி விட்ட
கொடூரன்!

நிம்மதியை
ஏலத்தில் விற்று
எமதர்மனை
பூமிக்கு
அழைத்து வந்த
அற்பன்!

யாவரும்
சமனென்று
குண்டுகளுக்கு மாத்திரம்
சமத்துவத்தைப் போதித்த
சண்டாளன்!

எவ்விடத்திலும்
எந்த நேரத்திலும்
உயிர்களை உறிஞ்சும்
உதவாக்கரை!

முடிவே காணாத
சமுத்திரம்
மனித மனங்கள்
முன்னேறிவிட்டால்
ஓடி ஒளித்துக் கொள்ளும்
ஒழுங்காக பிறக்காத
ஒரு ஜீவன்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத்தந்தைக்கு ....!

என்னுயிர்த்தந்தையே
இறைவனுக்கு அடுத்த .....
என் முதல்வனே
என்னைத் தேய்த்து
அழுக்கு நீக்கி
ஆளாக்கிய
அன்புத்தந்தையே .....
ஒரு நாளில்
உங்களைப்பற்றி
எத்தனையோ ..... நிகழ்வுகள்
இதயமேடையில்
அரங்கேறுகின்றன!

நீங்கள்
இல்லாதிருந்தால்
என்பெயர்
குறுகிய வட்டத்திற்குள்
முடங்கி இருக்கும்
உலகமே
உற்று நோக்கும் அளவிற்கு
என்னை உருவாக்கினீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையே
நூறு நாட்கள் என்ன
நூறு வருடங்கள்
கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
உறங்கிவிடாது
எங்கள் குடும்பத்தினருக்கு
ஒரு விடிவெள்ளியாக

எங்கள் உறவினரை
இயக்கும்
பெயர் பெற்ற சாரதியாக
பணியாற்றுனீர்கள்!
நான்கு பக்கமாக
சிதற இருந்த
எங்கள் உறவினர்களை
ஒரு கூரையின் கீழ்
உட்கார வைத்தீர்கள்!

தந்தையே ..... நீங்கள்
எங்களை விட்டுச் சென்றது
ஒரு விந்தையே!
ஒரு நிமிடம் கூட
உட்கார்ந்து
ஓய்வெடுத்தது கிடையாது!
ஒரு நாளும்
சோம்பலாக
இருந்ததும் கிடையாது
நோயால்
சுருண்டதும் கிடையாது
ஓடித்திரியும் போதே
உயிரை விட்டீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பிள்ளைகளில்
யாருக்காவது
நோய்த்தொல்லை
கொடுத்ததும் கிடையாது!
பிள்ளைகள்தான்
உங்களுக்கு
பெரும் தொல்லை
கொடுத்திருக்கும்!
இருந்தும்
உங்கள்
கண்களை நீங்கள்
புண்களாக்கிடவில்லை
புவியில்
பிரகாசிக்க வைத்தீர்கள்!

அன்புத்தந்தையே .....
உங்கள் பிள்ளைகள்
கேட்கிறோம்
யா ..... அல்லாஹ் .....
பாவங்கள் பொறுத்து
சோகங்கள் தீர்த்து
சொர்க்கத்தில்
சேர்ந்திடுவாயாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாற்காலி

நிமிடக்கணக்கில்
நிற்கின்ற போது
கால்களின் வேதனையை
வாங்கிக் கொண்டு
தன்னுடலையே
அர்ப்பணித்த அன்னை!

நோயாளிகளின்
பாதிநோயை
வாங்கிக் கொண்ட
வைத்திய நிபுணண்!

இயலாதவர்களுக்கு
உதவுவதில்
பணத்தை எதிர்பாராத
பரிசுத்த தொண்டன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பைக்கெடுத்தும்
மேனியை ஓட்டையாக்கியும்
பொதுத் தொண்டை
விடுவதில்லை!
சேவைக்கு
அரசியல்வாதிகள்
உங்களிடம்
பாடம் படிக்க வேண்டும்!
உங்களைப் போல்
பக்குவப்பட வேண்டும்!

வயோதிபர்கள்
எங்கு சென்றாலும்
உன்னைக்கண்டால்
ஓடி வந்து
உடலுறவு கொள்ள
துணிந்து விடுவார்கள்!
வருத்தமிருந்தாலும்
பொருத்தமாயிருப்பாய்!
வீடு, அலுவலகம்
வியாபார தலங்கள் மட்டுமன்றி
மனிதர்கள் எங்கெல்லாம்
படந்திருக்கின்றார்களோ
அங்கெல்லாம்
உம்மினத்தவரின்
வரவேற்புத்தானே
முதல் கிடைக்கும்!

மனிதர்கள்
வரவேற்கவில்லை
நீதானே மனிதர்களை
வரவேற்கிறாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவைகளும்
## பார்வைகளும்

கவிஞர்களே .....
பெண்களெல்லாம்
ஒன்றென்று புகழாதீர்கள்!
அவர்களின் கழுகுப் பார்வைகளும்
எனக்குத் தெரியும்!

கவிஞர்களே .....
பெண்களெல்லாம்
ஒன்றென்று இகழாதீர்கள்!
புனித மாணவர்களையும்
அனுபவத்தில் கண்டவன் நான்!

கணவன் வெளியில் போன
நொடிப்பொழுதில்
காமவெறி தீர்க்கும்
பெண்களின் வீடு
விஷப்பாம்புகுடியிருக்கும்
புற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிக்கணவன்
விஷப்பாம்புடன் அல்லவா
விளையாடுகிறான்!
நாளை அவன்
எயிட்ஸ் நோய்க்கு
இரையாகாமல் இருப்பானா?

தெருவில் நிற்கும் போது
உங்கள் பார்வை
அந்நிய ஆடவனை
கண்களால் கற்பழிக்கின்றதே .....!
நிர்வாணமாய் ரசிக்கின்றதே .....!
உங்களை பெண்கள் என்று
புகழக்கூடாது
பேய்களென்றே ஒதுக்க வேண்டும்!

தூய பெண்கள்
பெண் வடிவில்
பேசும் தெய்வங்கள்
கணவன் கடல் கடந்து
சென்றாலும்
கற்பு நிலை
தவறுவதில்லையென்று
இளமைக்கு வேலிபோட்டு
ஆசைக்கு அணைகட்டி
பட்டினியோடு வாழ
பழகி விட்டீர்கள்!

உங்களைக்குருடனும்
கூடாமல் சொல்லமாட்டான்!
காமுகனும்
தலை நிமிர்ந்து பார்க்கமாட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பின் பெருமை

நல்லிதயங்களை
தூய்மையாக்க
ஆண்டவனால் அளிக்கப்பட்ட
சிறப்பு தொற்று நீக்கி!

ஏழைகளின் பசியை
உணராதவர்களுக்கு
இறைவனால் ஒதுக்கப்பட்ட
கால அவகாசம்!

பொறுமை வறுமை
பணிவு பண்பு
அனைத்தையும்
போதிக்க வந்த புனிதன்!
நரகவாசல்களுக்கு
இரும்புக்கதவு போட்ட
வீரவான்!

சொர்க்கத்தை
திறந்து வைத்து
நறுமணம் பரப்பும்
கொடிமல்லிகை!
ஈமானின் இதயம்
விரிவுபட்டு
இணையில்லா இன்பத்தில்
ஊறி நின்று
நல்லதையே
செய்ய வைக்கும் தூயோன்!

வள்ளல்களின் கரத்தை
வலுவாக்கும்
ஈகையாளன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோன்பின் வருகை!

ஒலிபெருக்கியில்
தலைதெறித்த இசைகள்
குரல் தாழ்த்தும்!
பல மனிதர்களின்
அடக்கமில்லா
தூஷன வார்த்தைகள்
இடைவேளை எடுக்கும்!

தேநீர்க்கடைகள்
முகத்தைக் கவிழ்த்தாலும்
உள்ளே
தினசரி நாடகம்
மேடையேறும்!
ஈமானின் குழந்தைகள்
உன்னைக்கண்டு
இனையில்லா ஆனந்தம்
அடைவார்கள்!
அதிலும் சிறுவர்கள்
பெருநாளை நினைத்து
புத்தாடைக்கனவில்
பெருமிதம் கொள்வார்கள்!

சஹர் வேளையில்
சிறார்களின் சிறு நேர நோன்பும்
ஆரம்பமாகும்!

நோன்பு நோற்க சக்தியுள்ள
சில முஸ்லிம்கள்
இறுக்கமாக போத்திக் கொண்டு
உறங்குவார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில்
## விரிந்த நினைவு

என்னிதயமே
என்னிதயத்தின்
நாடித்துடிப்பு நீதானே .....!
உனது பெயரை
சொல்லிச் சொல்லித்தானே
அது அடிக்கிறதே .....!

உன்னை இயக்கும்
இதயத்திடம் கேட்டுப்பார்
அதற்கு
கண்ணடியிருந்தால்
போட்டுப்பார்!
என் உரு தெரியும்!
எத்தனையோ நாட்கள்
இரவுகளில் கனவுகளில்
கட்டியணைத்து
முத்தமிட்டது மட்டுமா?
நெருங்கும் போது
கனவு கலைந்து
கவலைப்பட்டிருக்கின்றேன்!
விடியும் வரைத் தூங்காது
ஏங்கி இருக்கின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே .....
இரவுகளில் என்னைப்பற்றி
ஏங்கியதில்லையா?
கனவுகளில் இறங்குவதில்லையா?
உன்னுறவை
நினைக்குந்தோறும்
என்னுள்ளம்
ஆனந்த வெள்ளத்தில்
மிதக்கின்றதே!
கனவுகள்
நினைவுகளை
சொர்க்கத்துக்கு
இட்டுச் செல்கின்றன!

நினைவுகளால் அனுபவித்த
சுகங்களை நான்
என்னவென்று சொல்ல?
தேவன் தந்த தெய்வமகளோ?
வாணி தந்த கவிநயமோ?
வாய் இனிக்கும் தமிழ்மகளோ?

வருடங்கள் நிமிஷங்களாகும்
நிமிஷங்களும் வருடங்களாகும்
கண்ணே .....
என் நினைவுகளில்
ஊடுருவி
உறவுகளை நினைவுப்படமாக
நெஞ்சில் விரித்து
நீ உறங்கு
கனவிலாவது
களிப்புப் பெறுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் வழிதானோ?

பிஞ்சில் பழுத்த
கனியும் சுவையில்லை!
பலாத்காரமாக
அடைத்து வைத்து
பழுத்ததும்
அவ்வளவு ருசியில்லை!

பெற்றார்கள் இல்லாமல்
வளர்ந்த பிள்ளைகளும்
நல்லவர்களாக
இருக்கப்போவதில்லை
சீரழிவின் சின்னமாகத்தான்
இருப்பார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்ராவின் கணவன்
எவளோடோ ஓடிவிட்டானாம்
வாழ வழியின்றி
தன்பெண் பிள்ளையை
பாட்டியிடம் கொடுத்து
சவூதிக்கு சவாரி
சென்று விட்டாள் பவித்திரா!
கணவனில்லாகுறைக்கு
நிறை கண்டு விட்டாள் போலும்!

வருட முடிவில் வருகின்றேன்
என்று மடல் போட்டவள்
ஆறுவருடங்களாகியும்
வரவில்லையே!

அரபியின் அதிகார
அணைப்பிற்கு அடிமையாகிவிட்டாள்
சவூதி பிரஜையாகிவிட்டாள்!
இன்னும் ஒரு வருடம் என்றே
பாட்டிக்கு பதில் வரும்!
அவளது பெண் பிள்ளையும்
பெரியவளாகிவிட்டாள்!

பெண்பிள்ளையல்ல
பேய்க்குட்டி
விழுந்தவுடன்
வெளிக்கிட்டால்
நள்ளிரவு வீட்டை நாடும்!
பாட்டிக்கும் அது
பவிசாகத்தெரியும்!
சவூதியிலிருந்து
பணம் வருகிறதே .....
இந்தகுட்டிசைத்தான்
எக்கேடுகெட்டாலும்
எமக்கென்ன என்றிருப்பாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கும்
இடங்களெல்லாம் சென்று
கிடைப்பதெல்லாம் உண்பாள்
இருபது வயது
இளைஞனின் சாப்பாடு
இவளுக்குப் போதாது!
எதிர்காலம்
தாய்வழியைத் தொடர்வாளோ?

படிப்பு இவளுக்கு
குதிரைக் கொம்பு
ஆனால் தினமும்
புத்தகம் சுமக்கும் கழுதை!

சவூதியில் சில பெண்கள்
செய்யும் தொழிலின்
ஒரு பாதியை சிலோனில் செய்வதற்கும்
இவள் தயார்!
இப்போது இளைஞனின்
சேஷ்டை என்றால்
இறுங்குப் பொரி!
வாலிபர்களோடு
உறவாடுவதில்
இவளுக்கொரு இன்பம்!
பருவத்துக்கு வரமுதல்
விருந்துக்குரெடி!

வட்டமிடும் வாலிபர்களே .....
கொஞ்சம் பொறுங்கள்
இரண்டொரு வருடங்கள்
கடந்து விட்டால்
தேவைக்கு வருவாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பனுக்கு
## ஒரு மடல்!

நண்பா .....
புகைதானென்று
புகைக்கிறாயே
இது இதயத்தையும்
தீய்ந்து விடும்
ஆரோக்கியத்தை
சுவீகரிக்கும்!

சிகரெட்டின் முன்பக்கம்
நெருப்பும்
மறுபக்கம்
முட்டாளின் வாயும்
இருக்குமென்று
அறிஞர் ஒருவர் கூறியது
உனக்குமா தெரியாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பா ..... புகை
உன்னழகு மேனியை
கருமையாக்கி
சிவந்த உன் நாக்கையும்
கரியாக்கி விட்டது!
நீ சிரிக்கும் போது
முத்துப்போன்ற உன் பற்களைக் கண்டு
முன்பு பொறாமைப்பட்டதுண்டு!
இன்று அந்தப்பற்களில்
காவிக்கலர் பூசியது யார்?

நண்பா ..... சற்று
எண்ணிப்பார
அந்த புகையை தொடமுதல்
இருந்த உற்சாகமும்
சுகமும்
இன்று உண்டா?

புகை உன்னை
புதைகுழிக்கல்லவா
இட்டுச் செல்கின்றது!

பணத்தைக் கொடுத்து
உடம்பைக் கெடுத்து
நோயை வாங்கி
நொந்து போகிறாயே!
வெந்து வேதனையில்
விழப்போகிறாயே.....!

நண்பா புகையை
பகையாக்கி விடு!
இல்லையேல்
புதைகுழிக்கு அத்திவாரத்தை
பலமாக்கிவிடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டத்தின் முடிவு

எனது அடுத்த வீட்டுக்கு
அடுத்த வீட்டின்
எதிர்வீடு
முதுமையடைந்தும்
குமரியாக எண்ணி
கைநிறைய
தங்க காப்புகள் போட்டு
கழுத்து நிறைய
தங்கமாலை போட்டு
மேல் தெரியும்
பட்டுடித்தி
பல்லைக்காட்டி
பாதையருகே நிற்கும்
பாத்திமாவின் வீடு!
பாத்திமாவின் பொழுது போக்கு
பாதையோரம்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உண்பாளோ
உறங்குவாளோ நானறியேன்!
தெருவோரம் நின்று
வயதுக்கிளைய
இளைஞர்களோடு வம்பளப்பதில்
அவள் பொம்பிளையல்ல!
சேலை கட்டிய குமரன்
மேனியை வெளிக்காட்டுவதில்
நீச்சல் வீராங்கனை!

நள்ளிரவில்தான் அவள்
குளித்திருக்க வேண்டும்!
அதிகாலையிலே
பவுடர் பளபளக்க
சென்ட் கமகமக்க
சேலை சரசரக்க
உடம்பில் அரைவாசிக்கு மேல்
வெளித்தெரிய
அதனை காற்று
முத்தமிட
முதுமையிலும் குமரியாக
முறுவலிப்பாள்!

பெண்களின் ஸ்பரிசம்
காணாத இளைஞர்களுக்கு
இவளொரு மின்சாரம்
இவளுக்கோ ஆண்களென்ற
வேறுபாடு கிடையாது
தான் பெண்ணென்று
ஆண்களுறவை
ஒதுக்குவதுமில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தெரியாத
ஆண்களுக்கு இவளொரு
பொழுதுபோக்கு சாதனம்!
இவள் விடுகின்ற மூச்சுத்தான்
சுற்றி நிற்கும் வாலிபர்கள்!

கணவனிருந்தும்
ஆண்களின் உறவுக்கு
ஆண்டவனால்
பொதுச்சொத்தாக்கப்பட்டவள்!
மனைவியையும்
பொதுச்சொத்தாக்கி
புவிக்கிட்ட
பொதுநலவாதியான
புதுமைக்கணவன்!
இது அவளின்
எண்ணத்துக்கு வெற்றிவிழா!

அவளது
பருவ வயதை அடைந்த
மகள்மாருக்கு
உணர்ச்சியில்லை
என்று எண்ணிவிட்டாளோ?
ஒவ்வொரு மகளும்
நாயோடும் நரியோடும்
வீட்டை விட்டு
ஓடும்போதுதான்
கிழடு தட்டியும்
குமராட்டம் போட்டத்தின்
பெறுபேறு தெரியும்!
அதுவரை ஆடம்மா ..... ஆடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம்
## வரும் வரைக்கும்

இந்தப்பூமி
எனக்குச் சொந்தமில்லை
நண்பர்களை என்றும்
நண்பர்களாக பழக
என் மூச்சும்
எனக்குச் சொந்தமில்லை .....!

இந்த ஊர் உறவு
மனைவி மக்கள்
எவரும் சொந்தமில்லை!
இவர்களையெல்லாம்
துறந்து மூச்சுப்போய்
பேச்சு அடங்கிவிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பேர்
நல்லவன் என்று சொன்னாலும்
மூன்று பேர்
பொல்லாதவன் என்பார்கள்!
நிலை இல்லாப்புவியில்
எவர் எது சொன்னாலும்
எனக்குக் கவலையில்லை!
நிலையான இடத்திற்கு
எந்நேரமும்
செல்லத்தயார்!

மரணம் என்கின்ற
மாமருந்தை
எதிர்பார்த்தே இருக்கின்றேன்
அது எந்த வழிவில்
வந்தாலும்
என்னை,
நம்பியிருந்தவர்களுக்குத்தான்
அது சுமை!
மற்றவர்களுக்கு
என்ன கதை?

பொல்ாத புவியில்
கல்லான மனிதர்களோடு
போலியுறவு கொள்வதைவிட
மனிதன் இல்லாத ஊர்
இருந்தால் சொல்லுங்கள்
போய் விடுகின்றேன்!

இல்லையே
எங்கும் மனிதர்
தொல்லையே!
அதனால்
மரணம் வரும் வரைக்கும்
நிம்மதி இல்லாதவன் .....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி தலைநிமிரும்

என்னைச்சுற்றி
நரிகள்
நேர்மைக்கு எதிரான
புதைகுழிகள்
நாங்கள்
இந்தகுழிகளை
அடைக்கத்தெரிந்த
புலிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் உடம்பை
போட்டாவது
குழியை நிரப்புவோம்
உங்கள் குணத்துக்கு
அடிமையாக மாட்டோம்!

நல்லவர்களை
அடக்கிவிட்டு
தூயவேடம் போட்டாலும்
உங்கள் நிழல்
புவியில் விழுவதை
நிறுத்த முடியுமா?

தன்னைவிட எதிரி
உயரக்கூடாது என்பது
இலட்சியத்திற்குள்
ஒரு அலட்சியம்!
எதிரியை புகழும்
வாய்களுக்கு
பூட்டு போட்டீர்கள்
எதிரியை எழுதும்
பத்திரிகைகளுக்கு
லஞ்சம் கொடுத்து
மறைத்தீர்கள்

எதிரியின் திறமையை
மறைக்க
இறைவனிடமும்
கை ஏந்தினீர்கள்!

எல்லாவற்றுக்கும் மேலாக
நீதி தலைநிமிர்வதால்
நீங்கள் ஓங்கப்போவதில்லை
விரைவில்
ஒதுங்கப்போகிறீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமரியான கிழவி

அரைக்கிழவிக்கு அறுபதுக்குமேல் வயது!
கொடியமணம் கொண்டதால்
அவளைக்கரம் பிடித்தவனும் அவளது
முப்பது வயதில்
புதுத் துணை தேடிப்போய்விட்டான்
வாயாடிப்பெண்ணோ
வாயால் வாடிவதங்கி
உற்றார் உறவினர் எவருமின்றி
தனிமையில் தள்ளாடுகிறாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது வயதை அடைந்தாலும்
குமரி நினைப்புத்தான் .....!
குரலை மென்மையாக்கி இனிமையாக
அழகாக அமுதாக பேசுவாள் ....!
குமரிப்பெண் போல சரிகைப்பட்டுடித்தி
சரசரக்க நடந்திடுவாள்!
தெருவால் போகிறவர்கள்
இவளைப்பார்த்தால்தான்
அவளுக்கு உறக்கம் வரும்!

நேரத்துக்கொரு புடவை
அறுபது வயதிலும் அலங்காரக் கொண்டை
முகம் நிறைந்த பவுடர்
மூக்கைத்துளைக்கும் பொரின் சென்ட்
குதியுயர்ந்த செருப்பு
ஆங்கிலம் தெரியாவிட்டாலும்
இடைக்கிடை ஆங்கிலச் சொற்கள்
இவைகள்தான் அறுபது வயது அன்னம்மாவின்
முதுமையிலும் இளமைக்கோல தோற்றம்!

இந்தத்தோற்றத்தோடு
பாதையோரம் நின்று
பாதசாரிகளின் பார்வைக்கு
விருந்து வைப்பாள்!
அறுபதைத்தாண்டினாலும் அன்னம்மாவின்
எண்ணத்திலும் வயது முப்பதுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பு

குடிகார கணவன்
இருந்த போது
கஷ்டப்பட்டாள்
இறந்த போதும்
கஷ்டப்படுகிறாள்!

இரந்த போதும் தராதவர்கள்
கற்புக்கு விலை பேசினார்கள்!
வயிற்றுக்கு ஒருவரும்
வழியில்லை ..... அதனால்
பணத்துக்கு கற்பிழந்தாள்!
உயர்ந்தவர்களெல்லாம்
இரவில்
அவளின் வீட்டிற்கு
படையெடுப்பு செய்தார்கள்!

அவள் வழியிருந்த போது
கற்பிழக்க விரும்பவில்லை
எல்லாம்
இழந்த போதுதான்
வயிற்றுக்காக
கற்பை இழக்கிறாள்!
உயர்ந்தவர்களே .....
உங்களுக்கு
எல்லாமிருந்தும்
அன்பான மனைவியிருந்தும்
உங்கள் கற்பை
பறிகொடுத்து விட்டீர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம்

## கடந்த ஞானம்!

அவளொரு புத்தகம் சுமக்கும்
கனவு மாணவி!
படிப்புக்காலம் முடிந்ததும்
டியூட்டரிகளில்
உலாவரும் ஒரு மாணவி!
அவளோடு படித்தவர்கள்
அவளுக்கு
படிப்பிக்க வந்துவிட்டார்கள்
இருந்தும் இவள் படிக்கிறாள்!

பெற்றோர்களுக்கு இவளொரு
எதிர்கால வைத்தியர்
பெற்றோர்கள் மனப்பாலில்
மதிமயங்கிவிட்டார்கள்!

காலங்கள் சங்கிலியாய்
சுழன்றன .....!
பெற்றோரின் வாலிபம்
வயோதிபமாக மாறியது!
பதவிக்கு முன்னர்
பரீட்சை தேறமுடியாது
நாறிப்போய்விட்டாள்!
பெற்றோருக்கும்
இப்போதுதான் புரிகிறது
படிப்பித்த பணத்தில்
ஒரு வீடு கட்டிமுடித்திருக்கலாம்
என்பது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசைமாறியவன்

தாயே உன் மகன்
ஆகாயத்திலிருந்து
பூமியில்
கால்வைப்பான்
என்று கனவு கண்டாயே!
நிதி உவந்தும்
பூமியிலும்
நிற்க முடியாமல்
புதைந்து விட்டானே
தெருக்களிலும்
அவன்
திசைமாறி விட்டானாமே!

படித்தவன்
பண்புள்ளவன்
புரிகின்ற பணியெல்லாம்
என் பிள்ளையின்
உழைப்பிற்கு ஈடாகுமோ?
ஆட்டிறைச்சி வாங்கவே
ஆலாய் பறக்கிறார்கள்
என்பிள்ளை
ஈரலும் கோழியும்
ஆடும் அறுக்கிளாவும்
கறியென வாங்கி
கொட்டுகிறானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துக்கு ஒரு உடை
உடுத்திக் கொள்கிறானே
இவர்களுக்கெல்லாம்
எங்கே முடியப்போகிறது?
என்று எல்லோரையும்
இகழ்வாக உரைத்தாயே!

இன்று இவன்
தெருவுக்கு வந்தாலே
திரள்கிறார்கள் எதிரிகள்!
எங்கே என்று தெரியாமல்
இடம் மாறி திரிகிறான்!

இப்போதுதான் உன்வாயே
அடைத்திருக்கிறது
இல்லாவிட்டால்
பக்கத்து வீட்டானின் காதுகளும்
செவிடாகியிருக்கும்!
அப்போது அவ்வளவுக்கு
கத்தித் தொலைத்தாயே
அறியாத்தாயே!
ஆணிவேரை அறியாமல்
பாதிவேரை புகழாதே!
பண்புள்ளவன்
உழைத்து உண்பவன்
ஒரு நாளும் தெருநாயாய்
திரியமாட்டான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதித் துளிகள்

நல்லவர்களை
தீயவார்த்தைகளால்
அலங்கரிப்பது
உனது
அன்றாடத்தொழில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறியவர்களின்
முன்னோர்களை
குற்றம் சொல்லி
மிக தீயோராக்கி
தீர்ப்பு வழங்குவாய்!

அவர்களது
அருமைக்குழந்தைகளின்
சிறந்த போக்கிற்கும்
நீயொரு களங்கத்தை
கற்பனை பண்ணி
நிஜமாய் உரைப்பாய்!

உங்கள் குழந்தைகள்
மதுக்கோப்பைகளின்
அருகே இருந்து
நீங்கள் அருந்தியவற்றின்
இறுதி துளிகளை
உருசி பார்த்து
வளர்கின்றன.....!
உங்கள் குழந்தைகளை
மதுவால் வளர்க்கும் போது
பசும்பாலில் வளரும்
நல்லிதயங்களை
ஏன் வீண்வார்த்தைகளால்
சாகடிக்கிறீர்கள்?

உயர்வானவர்களை
தாழ்வாக நினைக்கும் போது
இறைவன் உன் பரம்பரையை
பகடை காய்களாக்கி விட்டான்!
நல்லவரை இகழாதே
பரம்பரையை பாழடிக்காதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவே
## துணையானால்

கடமைகளும் கவலைகளும்
தலைமேல் ஏறி
சுமை கூடும்போது
வேதனைச்சுவர்
விரிவு படும்!
உலக வாழ்வின்
தேவைகளுக்கு
முயற்சி சில வேளை
மனதைக்குடைந்து
வேதனைச் சுவரின்
நீள அகலத்தை
இரட்டிப்பார்க்கும்!

தைரியம் என்கின்ற
பலசாலி
வேதனைச்சுவரை
இடித்துத் தள்ளும் போது
இன்பரேகை
மேனியெங்கும்
பிரவாகித்து ஓடும்!

சிந்தனை என்கின்ற
சீர்க்கருவியால்
கவலை அரக்கனுக்கு
இடம் கொடாது
துணிவு வீரனை
துணையாக்கிக் கொள்ள!
திரண்டு வரும் துண்பமும்
விரண்டோடும்
கொல்லவரும் கவலையும்
வெல்லவிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள்...!

வெளியே பார்ப்பதற்கு பழங்கள்
உள்ளே புழுக்கள்!

பார்த்தால் பளபளப்பு
கேட்டால் சிணுசிணுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தால் அரவணைப்பு
முடிந்தபின் முணுமுணுப்பு

கொடுத்தால் புகழ்வதில்லை
கொடுக்காத ஒன்றுக்கு நச்சரிப்பு!

அள்ளி இறைத்தாலும்
ஆறுதல் வார்த்தையில்லை
கொள்ளி வைக்கவும்
கொஞ்சமும் விருப்பமில்லை!

தோற்றத்தில் மல்லிகை
தொட்டுவிட்டால் சருகு!

வாயோ ..... அழகு
வார்த்தையோ நெருப்பு!

உதவியை எதிர்பார்ப்பாள்
உபத்திரம் பரிசளிப்பாள்!

பதவியை இகழ்வாள்
பணத்தை பறித்தெடுப்பாள்!

நோய் வந்தால்
நாயாவாள்
நாம்வீழ்ந்தால்
பேயாவாள்!

தன் விருப்பம் மறக்கமாட்டாள்
பிறர் விருப்பம் ஏற்கமாட்டாள்!

கடைசிகாலம் உணர்ந்திடுவாள்
கடவுள் நம்மை அழைத்திடுவார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்கால சந்ததிகள்!

நெஞ்சை கட்டிப்போட்டு
ஆசையை மூட்டை கட்டி
பேருக்கு வாழ்கிறார்கள்
பெரும் தொகை ஜீவன்கள்!

உறவில்லை ஒற்றுமையில்லை
ஒருவரை ஒருவர் புரிவதில்லை
மற்றவர் உணர்வை
மதிப்பதில்லை!
மனதை இறுக்கி
நடக்கிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்குப்பிறந்த
வாரிசுகள்
வெட்ட வெளியில்
நட்ட மரம்போல
வீதி அளப்பார்கள்
இல்லையெனில்
சுதந்திர உணர்வுடன்
வழிதவறி
குழிக்குள் விழுந்து
குட்டிச்சுவராகி விடுவார்கள்!

ஒட்டாத ஜோடிகள்
ஏன் உறவானீர்கள்?
ஒட்டுவதாக முன்பு
உறவாடினீர்கள்
உயிருள்ளவரை

பிரிவதில்லையென
இருவரும் உரைத்தீர்கள்!
ஒருவரை ஒருவர் நம்பி
மணமுடித்தீர்கள்!

பிள்ளைகள் பிறந்த பின்பு
ஏன் போர்க்கொடி தூக்கினீர்கள்?
இதயத்தில் அன்பிருந்தால்
என்றுமே இன்பந்தான்!
பெண்மையில்
வன்மை வேண்டாம்
ஆண்மையில்
அதிகாரம் வேண்டாம்
இருவரும் பணிய
இதமாகும் வாழ்வு
எம் சந்ததியினரும்
எதிர்கால நாயகர்களாய்
இப்புவியில் நிலைப்பார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையருள்

இறைவன் கைகழுவி
வீசிவிட்ட நீருக்கே
இவ்வித போராட்டம் என்றால்
அவன் அருள் புரிந்தால்
எப்படி இருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் வளர்கின்ற காலத்தில்
கொஞ்சம்
மழை பேயா விட்டால்
கண்ணீரை அல்லவா
கொட்டுகிறீர்கள்?
பயிர் விளையாவிட்டால்
தற்கொலைக்கு அல்லவா
உங்கள் மனம்
ஓடுகின்றது!

நீருக்கும் அதன் விளைவிற்கும்
நன்றி செலுத்துகிறீர்களா?
இல்லவேயில்லை!
வீட்டிற்கு வரும்
பிச்சைக்காரர்களை
விரட்டி விடுகின்றீர்களே.....!
இறைவன் பொறுத்துக் கொண்டுதான்
இருக்கிறான் .....!
பொறுமைக்கும்
ஒரு எல்லையுண்டு!

எரிக்கும் நெருப்பு
சூரியனை
உதைத்துத் தள்ளிவிட்டால்
என்ன செய்வீர்கள்?
புழுவாய் துடித்து
இரையாய் போவீர்கள்!
காற்று உங்களை
கடதாசி துண்டு போல
தூக்கிச் செல்லும்!

இவைகளை எண்ணியாவது
இறைவனின்
அருளுக்கு
நன்றி செலுத்துங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய யுகத்தில்!

கொடுப்பது போல் நடிப்பார்
சிலர்!
கொடுத்தும் கொடுக்காதவர்
பெயரெடுப்பார் பலர்!
உள்ளத்தையும்
மறைப்பார் உதவாதவர்
நல்லத்தையும்
கெடுப்பார் நயவஞ்சகர்!
ஒன்று .....
மனச்சாட்சி
அதில் மீட்சியில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதை செய்பவன்
கூடாதவனாக்கப்படுகின்றான்
தீயவை செய்பவன்
சிலரால் மதிக்கப்படுகின்றான்
திருடனுக்கும் மரியாதை
வழங்கப்படுகின்றது .....!
அதனால்
எப்படி நல்லவன்
உருவாகுவான்?
நல்லவன் எப்படி
தலைநிமிருவான்?

இந்த உலகில்
எல்லாம் தலைகீழ்!
வாழ்க்கை
வயற்புரத்தில்
அங்காடி சந்தைபோல்!

ஒரு பொதுத்தொண்டன்
மேடையிலே பேசுகின்றான்
ஏழை ஒருவன் என் முன்னே
பசி என்று உரைத்தால்
எனது உணவையாவது
உன்னக் கொடுப்பேன் என்று!
அவனோ ..... வீட்டுக்கு வரும்
ஏழைகளுக்கு ஐந்து சதமும்
கொடுத்திடமாட்டான்!

ஊரவர்களின்
பணம் சேர்த்து
கால் பகுதிக்கு மட்டும்
விழாவைத்துக் கொடுப்பது
அவன் தொழில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு
## ஒரு வார்த்தை

வருகின்ற நண்பர்களுக்கு
முகம் மலர
வரவேற்புக் கொடுத்து
நகைச்சுவை ஊட்டுங்கள்!
அனைவரையும் சிரிப்புக் காட்டச் சொல்லி
வேடங்கள் கொடுங்கள்!
இதைவிட்டு உயிர் போக்கும்
வதை வேண்டாம்!

வாய்ப்பேச்சுக்களினால்
வரம்பின்றி வசை பாடுங்கள்
பரவாயில்லை!
தலைமுடியை வெட்டிவிட்டு
தாளம் போட்டு
இசை பாடுங்கள்!
போதாவிட்டால்
மொட்டையிலே
மோதிரவிரலால்
தட்டியும் பாருங்கள்!
இதை விட்டு விட்டு
சிறுநீரகத்தை சிதைத்து
சாகடிக்க வேண்டாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்போக்கும் ராக்கிங்
மாணவர்களே .....
உங்களுக்கு அழகா?
எதிர்கால சிற்பிகளே .....
கீழ்த்தரமான பெயரெடுத்து
எதிர்காலத்திற்கு
குழிதோண்டாதீர்கள்
மற்றவர்களின்
உயிருக்கும் உடலுக்கும்
உலைவைக்காதீர்கள்!
மாணவர்களே .....
நீங்கள் மாணவியர்களை
மானபங்கப்படுத்தாதீர்கள்
அதற்கு
மாணவியர்கள் இருக்கிறார்கள்!
மாணவியர்களே
ராக்கிங் என்ற பெயரில்
மாணவர்களோடு
அசிங்கமாக நடக்காதீர்கள்!

ராக்கிங் என்றால்
அடித்துக் கொல்வதா?
ஐயோ ..... வெட்கக்கேடு
படித்து பயன் என்ன?

உயிர்வதை வேண்டாம்
பண்போடு ராக்கிங்
செய்யுங்கள் .....!
சினேகபூர்வமாக
சிரிக்க சிந்திக்க
ராக்கிங்!
இல்லையேல் அதற்கு
குட்பை சொல்லுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் தலைவர் அஷ்ரப்

கிழக்கின் விளக்கே .....
இதயத்தின் மூச்சே
எங்கள் தலைவர்
சேவைச்சிகரம்
அஷ்ரப் அவர்களே .....
உங்கள் அரசியல் வாழ்வு
என்று தொடங்கியதோ
அன்றிலிருந்து
கிழக்கு
வெளுக்கத்தொடங்கியது!

கிராமங்களில்
ஒரு அலுவலகத்தைக் கூட
காணாத மாந்தர்கள்
பலகாரியங்கள் முடிக்கும்
அலுவலகங்கள் உருவாக
வழி சமைத்தீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்கள் நகரங்களாகின
நகரங்கள் மாநகர்களாகின!
தொழிற்துறை பெருகின .....
உங்கள் அமைச்சினால்
பாதிப்போரின்
தொழில் இல்லாப்பிரச்சினை
பறிபோயின!
தனிக்குடித்தனம் புரிந்தோர்
இல்லறத்தில் இறங்கினார்கள்!

கிழக்கின் விளக்கே
இதயத்தின் மூச்சே
வாழ்க பல்லாண்டு!

நீங்கள்
மனிதர்கள் மத்தியில்
பெறுமதி கணிக்க முடியாத
ஒரு பொக்கிஷம்
ஏழைகள் வாழ்வதற்கு
இந்நாடு மேலும் செழிப்பதற்கு
மேலும் பல்லாண்டு
நீங்கள் வாழவேண்டும்!

உங்கள் சேவையின் பட்டியல்
குறுகிவிட வில்லை
நீண்டு நிமிர்கின்றன .....!
கேட்பதையும் செய்யாத
அரசியல்வாதிகள் மத்தியில்
மக்கள் கேட்காத
பெரும் சேவைகளையும்
செய்யும் செம்மல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகம் கனவு என்று
கூறியவர்கள்
வேலை தொடங்கியதும்
கனவில் பிதற்றுகிறவர்கள் போல
கதையளக்கிறார்கள்!

எங்கள் அரும்பெரும் தலைவர்
தூற்றலைக்கண்டு
துவண்டுவிடப்போவதில்லை!
சேவை தேவை
நல்லவர்களுக்குத்தானே
அவர்களுக்காக
பணிதொடர்கிறார்!

தமிழர், சிங்களவர், முஸ்லிம்
என்று பிரித்துப்பார்ப்பதில்லை!
யாவரும் சமனென்ற
தத்துவத்தை
போதிக்கவந்த புனிதர்!
எல்லோரும் இந்நாட்டு
மக்கள்
எல்லோரும் சுதந்திரமாக
வாழ வேண்டும் என்று
சுதந்திரமாகக்கூறியவர்!

இப்படிப்பட்ட
அரும்பெரும் தலைவரின்
கரத்தை
பலப்படுத்தத்தானே வேண்டும்?
பல்லாண்டு வாழ்ந்து
பணிதனை தொடர
மனம் திறந்து வாழ்த்துகிறேன்!
கிழக்கின் விளக்கே
நீடூழி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் தூய்மை பெற

மூன்று கடமைகளையும்
நிறைவேற்றிய
ஈமான்காரர்களில்
வசதி உள்ளவர்கள்
மேலும் இரண்டு
கடமைகளுக்கு
உரித்தாக்கப்பட்டார்கள்!

ஸக்காத்
இங்கேயே செய்து கொள்ளலாம்
உள்ளத்தைத் தூய்மையாக்கி
பாலகனின் இதயமாக்கி
வருவதற்கு
மக்கா செல்லுங்கள்
அங்கே ..... கையேந்தி
அழுது தொழுது
அல்லாஹ்விடம் மன்றாடி
பாவங்கள் பொறுக்கப்பட்டு
தூய்மையாளராக
வாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானில் வரும்
நிலாபோல
களங்கமன்றி வாருங்கள்!

மக்கா நாயகத்தின்
தாயகம்
மதீனா நாயகத்தின்
இறப்பிடம்
இவைகளை தரிசித்து
சரித்திரம் ஒன்றை
சான்றாக்கி வாருங்கள்!

பழையன மறந்து
புதியவராக
புண்ணியங்கள் செய்யும்
பெரியவராக
புவியில் கால்வையுங்கள்!
இல்லாமை என்பது
இனி உங்களுக்கு வராது
அல்லாஹ்வின் பாதையில்
செல்லுங்கள்!

மக்கா சென்று
வறுமையில் மரித்தவர்
எவருமேயில்லை .....!
வசிதியிருந்தும்
மக்கா போகாதவர்
வசதியாக இருந்ததுமில்லை
எனவே வசதி கொண்டோரே
செம்மல் நபியின்
சரித்திரம் கான
ஜனத்திரள்மோதும்
மக்கா செல்வோம்
மனதை தூய்மையாக்குவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணிந்தவன்

நான் நல்லது
செய்து பார்க்கிறேன்
மதிப்பில்லை!
தீயவர்களுக்குத்தான்
செல்வாக்கு!
இந்த தீய வாக்கிற்காக
என் தூய நடவடிக்கை
மாறப்போவதில்லை!

தெருவில் நடந்தாலும்
சொறிநாய்கள்
என்னை
துரத்தப்பார்க்கின்றன!
அந்த நாய்களுக்கு
நான் எமனாவேன் என்பது
இப்போதுதான்
அவர்களுக்கு புரிகிறது!

நாய்களுக்கு நரியாவேன்
பேய்களுக்கு பெரும்
வைத்தியனாவேன்!
குள்ளர்களுக்கு
குத்துச்சண்டை வீரனாவேன்
மொத்தத்தில் நான்
தீயவர்களை எதிர்க்கும்
ஒரு சக்தியாவேன்!

(தினக்குரல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மனைவி

நாவிற்கு சுவையூறும் உணவினை
நாள்தோறும் சமைத்துமே அளிப்பவள்
பூவிற்கு பேர் கொண்ட பெண்ணவள்
புவியிலே எனக்கென்றே பிறந்தவள்!

உயிருக்கு துணையாக இருப்பவள்
உடலுக்கும் சுவையாக அமைபவள்
பயிருக்கு மழைபோல பயனவள்
பலதுக்கும் உதவியே உயர்பவள்!

உள்ளத்தில் என்னுரு இன்றியே
ஒரு நொடி வாழாத பெண்ணவள்
எண்ணத்தில் அவளெந்தன் தேன்குடம்
என் நெஞ்சில் ஆடுவாள் களிநடம்!

கண்ணுக்கு ஒளியாக அமைந்தவள்
கருணைக்கு இலக்காக வந்தவள்
பெண்ணுக்கு இலக்கணம் வகுத்தவள்
பிறப்புக்குப்பயனாக நின்றவள்!

(சூடாமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலியாமல் காப்போம்

முத்தம்மா மெத்த நல்லாப்பாடுகிறாள்
முத்தான கருத்யைதில் சேர்க்கின்றாள்
பித்தாக நின்று பொருள் பார்க்கின்றேன்
பேதலித்து உங்களை நான் கேட்கின்றேன்!

காடுமலை மேடு எல்லாம் தேயிலையாக்கி
காசு பணம் தந்துயர வழிகள் காட்டி
கூடுவிட்டகுருவியாகி சோர்வதென்றால்
கோனுயர்ந்து ஆவதென்ன அழிவுதானே!

மலைமுகடு தினம் தோறும் ஏறிடுவாள்
மலைநாடு செழிக்கவே உரமிடுவாள்!
காலை நேர வெயிலிலும் உருகிடுவாள்
பனிப்பொழுதும் பாராமல் உழைத்திடுவாள்!

நாட்டுக்கு உயர்வு தரும் நல்லவர்கள்
நாள்தோறும் நலியாமல் வாழ்ந்திடவே
கூட்டுக்கு உழைப்பதாக நாம் நினைத்து
காத்திடுவோம் அவர் நலத்தை காலமெலாம்!

(சூடாமணி))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்குணங்கள்

காகம் கறுப்புத்தான்
ஆனால் தனியாக
புசிக்காது!

நாய் குரைக்கும்தான்
ஆனால்
நன்றி மறக்காது
(சூடாமணி)

## வாடிய மலர்

வண்டிற்கு விருந்திடும்
பூவே .....
வண்டினது விஷத்தையுமல்லவா
நீ உறிஞ்சிவிட்டாய்!
பிழைக்கவே மாட்டாய்!
(தினகரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகள்

காதலுக்கே
உன்னிழமை
அர்ப்பணம்!
திருமணமும் வாழ்வும்
உனக்கிங்கே
சொர்ப்பணம்
(சங்கமம்)

## நினைவுகள்

என்னை வென்று விட்டாய்
என்றுதான் நினைத்திருப்பாய்
ஆனால் உன் வாழ்க்கையை
அல்லவா தின்று விட்டாய்!
(சிந்தாமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

வாழ்க்கையில்
தொல்லைகள்
பல்லவி!
துயரங்கள்
அனுபல்லவி
தோல்விகள்
சரணம்!
மனைவியின்
நச்சரிப்பு
இதய இசைக்கருவிக்கு
வாய்ப்பூட்டு!

(வீரகேசரி)

## மொட்டைக்கடிதம்

கோழைகளின்
ஏக்கவெளிப்பாடு
சாதிக்க இயலாதவர்களின்
சண்டித்தனம்
துணிச்சல்
இல்லாதவனின் துடிப்பு!
குற்றமுள்ளவர்களின்
குறுக்குவழி!
காய்த்த மரத்துக்கு
கல்லெறி .....!
தூயவனின் மனதை
மேலும் தூய்மையாக்கும்
ஏணிப்படி!

(வீரகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THAJUL ATHEEB
S. A. R. M. SEYED HASSAN MOULANA
"SADAKA PATHU"
131 B, KINTAVUR - 12
SRI LANKA.

## இனிக்கும் மனசு

சொல்லில் எழுதாச் சுந்தரமே
சோலையில் மலரா மல்லிகையே
கல்லில் செதுக்கா ஓவியமே
காகிதம் பதிக்கா காவியமே
முள்ளில் மலரும் ரோஜாவாய்
முறுவல் பூக்கும் பூவிதழே!
துள்ளிப்பாய்ந்து நீபோனால்
துடித்துப்போகுது என் மனசு!

அன்பின் பாடல் நீபாடி
அருகில் அசைந்துதான் வாடி
பண்பின் சிகரம் நீதான்டீ
பாசத்தின் தீபமும் நீதான்டீ
முன்பின் தெரியா ஆளாநான்
மூக்கின் நுனிக் கோபத்தாலே
என்னை தகர்த்து நீபோனால்
என்றும் துடிக்கும் என் மனசு!

(சங்கமம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதர்கள் !

கையில்
வலுவுள்ளவன்
பொய்யை
சொன்னாலும்
தலையை
ஆட்டுவார்கள்!
குடிகாரன்
கூத்தாடினால்
அதையும்
பாராட்டுவார்கள்!

வசதியற்றவன்
உண்மையை
சொன்னாலும்
பொய்யன் என்று
பட்டம்
சூட்டுவார்கள்!

நல்லவனாக
நடந்தாலும்
கெட்டவன் என்று
ஒதுக்குவார்கள்!
காலமல்ல
மனிதர்கள்
மாறிவிட்டார்கள்!

(வீரகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கெட்டவன்தான்...!

நாற்புறமும்
தீயவர்களால்
சூழப்பட்டிருப்பதால்
நானும்
தீயவனாகிவிடுவேன்
என்று மட்டும்
எண்ணிவிடாதீர்கள்!
தீயவனுக்கு என்றும்
தீயவனாகவே இருப்பேன்!

நல்லவர்களின்
நண்பனாகவே
மிளிர்வேன்
வேடம் போடுவோரை
வெளிச்சத்துக்கு
கொண்டுவருவேன்!
கற்பிழந்தும்
கண்ணகி வேடம்
போடுகின்ற
கலியுக
காரிகைகளை
காட்டிவைப்பேன்!
ஏமாற்றுவோரை
எல்லோருக்கும் காட்டி
அவர்களையே
ஏமாற வைப்பேன்!
இந்த வழிகளில்
நான் கெட்டவந்தான்
நல்லவனில்லை!

(வீரகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிச்சு

பெரியவர்களை
வரவேற்க
நான் பெரியவனில்லையே .....!

அப்படி ஆகிவிட
ஆசைப்பட்டவர்கள்
சிற்றூரிலும் மிகச் செறிவு!
அதனால் அவர்கள்
முன்னுக்கு
நிற்கிறார்கள் .....!

அரசியலில்
படுத்து தூங்கி
பதுக்கி வாங்கி
பழக்கப்பட்டவர்கள்!
நான் இருந்ததையும்
கொடுத்து
என்னையும் ஈந்து
நிற்கின்றேன் .....!
அவர்கள்தான்
அரசியல்வாதிகளோடு
அராஜகம் நடத்த
அருகதை உள்ளவர்கள்!
எல்லாம் தெரிந்தும்
தெரியாதது போல இருக்கின்றேன்!
அதற்காக முட்டாள்களாகி
மொட்டை தலைக்கும்
முழங்காலுக்கும்
முடிச்சு போடுகிறீர்களே .....
அதை நினைத்து துக்கமில்லை
வெட்கம்

(வீரகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை எங்கே ?

எவன்தான்
உள்ளதை
உள்ளபடி
சொல்கிறான்!
ஜவுளிக்கடை
வியாபாரியும்
உங்களுக்குத்தான்
இந்த விலைக்கு
தருகிறேன்
என்பான்!
பெயரெடுத்த
விபச்சாரியும்
உங்களிடம்தான்
உண்மையான
அன்பு என்பாள்!
கோவிலில் பூசாரி கூட
இந்தப் பொருத்தம் போல
எந்தப் பொருத்தமும்
இருந்ததில்லை என்று
திருமணத்தை
முடிக்கிறார்!
உள்ளத்தில்
உள்ள உண்மை
வார்த்தையில்
வராதா!

(வீரகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுகை

நாறிப்போன
உங்கள் மனதில்
கறைகளை
அகற்றிவிட்டு
சொர்க்கத்துக்கு
அடிக்கல் நாட்டப்படும்!

பாவத்தை உணர்ந்து
தொழுகைக்கு பின்னர்
கேட்கப்படும் துஆ
அல்லாஹ்வால்
அங்கீகரிக்கப்படும்!

எப்பேர்ப்பட்ட
கொடியவர்களையும்
நன்மையின் பக்கம்
அழைத்துச் செல்லும்
வழிகாட்டி!

முஸ்லிம்களை
பிரித்தறியும் கருவிகளில்
ஒன்றுமட்டுமல்ல
நல்ல முஸ்லிம்களை
இனம் காணும்
திசையறிகருவி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தில்
கொடியவர்கள் இன்னும்
அடங்கவில்லை எனின்
அடக்கத்தை தரும்
தொழுகையை இன்னும்
கடைப்பிடிக்கவில்லை
என்று அர்த்தகம்!
தொழுகை
அடக்கமுள்ளவர்களின்
நண்பன்!

நிரந்தர மறுமை வாழ்வுக்கு
நாம் சேர்க்கும்
சொத்துக்களில்
இதுவும் ஒன்று!

முஸ்லிம்கள் யாவருக்கும்
வேறுபாடின்றி
கடமையாக்கப்பட்ட
காரியம்!
இதனை செய்யாதவர்கள்
கடைசி வரையும்
இறைவனால்
மன்னிக்கப்படாத
குற்றவாளிகள்!

உள்ளங்கள் அமைதி பெற
நண்மைகள் நம்மை நாட
உயர்வு தொடர்ந்து வர
அமைதி தோன்ற
தொழுகையை தொடர்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடி

முள்ளால்
முள் எடுக்கலாம்
அன்பால்
காரியம் சாதிக்கலாம்
அதிகாரம் பயனேதும் தராது!
சிரித்தால்
புன்னகைப்பார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைத்தால்
உன்னை வெறுப்பார்கள்
அதிகாரத் தொணி
உன்னை கீழிறக்கும்
பணிவான நடை
புகழ் சேர்க்கும்!
போட்டி வேண்டும்
அது பொறாமையானால்
மனதை இருளாக்கும்
மமதை கொள்ளவைக்கும்
வெறுப்பு நீண்டு வளரும்
விரிசல் கால் விரிக்கும்!

கீழ் மட்ட மக்களிடம்
அன்பாக பணிவாக
பேசும் பக்குவமுள்ளவர்கள்
நல்லவர்களுக்கு எடுத்துக் காட்டு!
மேலதிகாரியிடம்
துணிந்து
தவறை எடுத்துச் சொல்பவன்தான்
நல்லவனுக்கு வழிகாட்டி!

உள்ளதை
ஒளிவு மறைவின்றி
தவறு செய்தவரிடமே
தயங்காது கூறுபவர்கள்தான்
சாட்சி சொல்லவும்
தகுதி உள்ளவர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்திற்கு பின்னால்
கதைப்பவர்கள்
அகத்தின் கழுத்தை
நெரித்தவர்கள்!
மற்றவனுக்குரியதை
மறைமுகமாக
சுருட்டுகிறாரர்களே .....
அவர்கள்
தங்களுக்குரியதையும்
இழந்து
தவிக்கப்போகிறார்கள்!
உண்ணவும் வழியின்றி
ஓடித்திரியப்போகிறவர்கள்!

கணவனுக்கு விரோதமாக
எவள் நடக்கிறாளோ
அவள் நடுக்கடலில்
போய் விழும்நாள்
நழுவிவிடாது!
உற்றாரின்
உதவாத வார்த்தைக்கு
செவிமடுத்து
உற்றவனை உதறுகின்ற
பெண்கள்
தங்கள்
கண்களையேகுத்தி
குருடாகிப்போனவர்கள்!
பின்னர்
தடுமாறும் போதுதான்
தவறை உணர்வார்கள்
ஆனால்
சென்ற காலம் திரும்பாது
வாய் சுட்டபுண் ஆறாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூஞ்சோலை

பூங்காற்று
பூஞ்சோலையில்
அனுமதி கோளாமல்
அரவணைக்க செல்லும்
ஆடவன்!

அந்த ஆடவனின்
அரவணைப்பினால்
வெட்கித்தலைகுனியும்
மலர்ப் பெண்கள்!
அவர்களின் அங்கமே
கூச்சத்தினால் நடுநடுங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சுதந்திர இறுக்க
இன்பத்திற்குள்ளும்
அத்துமீறி செல்லும்
காமுக வண்டினங்கள்
உருசி பார்த்து
உரசி செல்லும்!

வண்டினங்களின்
கற்பளிப்பின் பின்னும்
வாழ்வது
வெட்கமற்ற செயலென்று
தற்கொலை செய்ய
தலை சுருட்டி
மூச்சை நிறுத்த
மலர்களின் உயிரற்ற
உடல்
சில தினங்களில்
சருகாய் விழும்!

எத்தனை உயிர்களை
உறிஞ்சிய பின்னும்
வண்டே .....
விட்டு விடுகின்றீர்களா?
வட்மிடுகின்றீர்களே
வாலாட்டுகின்றீர்களே!
ஆசைக்கு அளவுண்டு
வண்டே உனக்கில்லையா?

தழுவும் தென்றல் கூட
கட்டுப்பாடு
போட்டல்லவா
களிப்பூட்டுகின்றது!
வண்டே ..... உனக்கு
கட்டுப்பாடுமில்லை
தட்டுப்பாடும் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரத்தைக் காப்பாற்று

நம்மோடு
சுயநலத்திற்காக
இணைபவர்கள்
எதிரியைவிட
பயங்கரமான எதிரிகள்
தேவை நிறைவேறிய பின்
நீயார் என்று
நம்மை தெரியாதது போல
கேள்வி கேட்டாலும்
ஆச்சரியப்படுவதற்கில்லை!
அப்படிப்பட்டவர்களிடம்
சிறு உதவி கேட்பினும்
மறுத்துவிடுவார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு நாம்
வேலைக்காரர்களாகி
வீண்பணி செய்யக்கூடாது!
நன்றி மறந்தவர்களுக்கு
நாம் உதவக்கூடாது
மனைவியென்றாலும்
மதிக்காவிட்டால்
இருக்கக்கூடாது!
இரத்தத்தோடு மானம்
கலந்திருக்க வேண்டும்!
மானமிழந்து உறவு கொள்வதைவிட
தனியாக
சுதந்திரக்காற்றை
சுவாசிக்கலாம்!

முன்னோர்கள்
இரத்தம் சிந்தி
எடுத்த சுதந்திரம்!
சிலருக்காக நாம்
அதை இழக்கக்கூடாது!
நான் பெரியவனென
சிலர் மார்தட்டலாம்
இறைவன் ஒருவனைத்தவிர
நமக்கு எவரும்
பெரிதில்லை!
நான் பெரியவன் என்பவரோடு
நான் உறவில்லை என்பது
சுதந்திரத்தின் தோன்றல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகு முளைத்த சிங்காரிகள்

எங்கே போகிறார்கள்
இந்தப்பெண்கள்?
நடையா நடை
பூமியே அதிரும்
எஸ்.ரி.எப் படை!
தலையில் முக்காடு
அது பழைய காலமாம்
முந்தானை
முதுகுக்கு பின்னால்
பந்தாடுகிறது!
பெண்ணே நீயும்
ஒரு முஸ்லிமா?
வெட்கமாயிருக்கிறது!
கட்டிய கணவன்
தொழிலுக்குப் போனதும்
அந்நியனோடு
கையடித்து
உன் மேல் கைவைக்கவும்
சுதந்திரத்தை அவனுக்கு
சொல்லிக்காட்டுகிறாயே!
அந்நியன் உறவில்
கிடைக்கும் இன்பம்
கணவனில் இல்லையென
உறுதியாகச் சொல்வேன்!
பெண்ணே ..... நீ
விபச்சார விடுதியின்
உறைவிடமா?
எங்கே போகிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமை நாளில்
நரகத்திற்கு இரையாகிவிட
இங்கே பயிற்சியா?
அன்பான, அழகான
கணவன் இருந்தும்
உனக்கு போதுமான
வசதி தந்தும்
அவனில்
பட்டினி கிடந்த
நாய் மாதிரி பாய்கிறாயே!
தெரு நாய்களையும்
சொறிநாய்களையும்
முத்தத்திற்கு அல்லவா
அழைக்கிறாய்
பெண்ணே ..... உனக்கென்ன
புத்தி பேதலித்து விட்டதா?
இஸ்லாம்தான் இல்லை
அந்நிய மதத்தவர்
காப்பாற்றும் கற்பும்
இல்லையெனில்
நீயொரு பெண்ணல்ல
பெண்ணுருவில் பேய் .....!

கணவன் வீட்டை விட்டு
வெளிச்சென்றதும்
மனைவியானவள்
தன் கற்பையும்
கணவனின் பொருட்களையும்
பாதுகாப்பாள் என்பது
நாயகவாக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் வெளிக்கிட்டால்
தானும் வெளிக்கிட்டு
ஆடவர்கள்குடியிருக்கும்
இடங்கள் சென்று
அவர்களோடு அரட்டையடித்து
வேளை பார்த்து
காமப்பசி தீர்த்து
பேயாய் அலைவது
இன்றைய கால
சில பெண்களின் போக்கு!
தூய்மையற்ற இவர்கள்
செத்து தொலையமாட்டார்களா?
அல்லது நோயில்
அழுகிடமாட்டார்களா?

கற்பை பொதுவாக்கி
ஆடவர் பசி தீர்க்கும்
பொருளாக்கி
வாழ்கின்ற பெண்களே .....
உங்களின் உயிர்வைத்து
உயிர்காப்பாற்றும்
அவனுக்கு
இவ்விதம் செய்வதை விட
திருமணம் செய்யாமலே
தெருத்தெருவாய் திரியலாமே!

நரகத்தின் நெருப்புகளுக்கு
நீங்களெல்லாம் விறகு
உங்களுக்கு பிடித்து
நிறுத்த முடியாத சிறகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறியாமை இருள்

வயது போன காலத்தில்
ஒதுங்கிவிட வேண்டும்
இல்லையேல் இளசுகள் உன்னை
ஏட்டிக்குப் போட்டியாய்
நினைக்கும்!
அடுத்தவரிடம் கை நீட்டும் நீ
அடங்கி நடக்க வேண்டும்!
இல்லையேல்
தருவோரும் மறுப்பர்!
புகழ்பாடும் நீ
அனுபவிக்கும் கஷ்டங்களை
எண்ணிப்பார்க்க வேண்டும்!
அப்போதுதான் மற்றவரின்
உயர்வும்
நீ பாதாளத்திலிருப்பதும்
தெரிய வரும்!
கனவை கதைக்கும் நீ
நிஜத்தை நினைக்க வேண்டும்
அப்போதுதான் உன்
முட்டாள்தனம் தெரியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிமுகம்

தென்கிழக்கின் கேந்திரமாம் ஒலுவில் ஊரை பிறப்பிடமாகக் கொண்டவரே அமுதன் என்ற புனைப் பெயரில் எழுதி வரும் அலாவுதீன்.

எழுத்துலகப்பிரவேசம் எழுபத்தாறில், கவிதை, கதை, கட்டுரை என்று ஆர்வம் காட்டி வரும் படைப்பாளி எளிமையாளன்.

படைப்புக்கள் பல படைத்து தினசரிகள், சஞ்சிகைகளில் இடம் பிடித்து வரும் ஒலுவில் அமுதன் வானொலியில் மெல்லிசைப்பாடல்களும் யாத்து ஒலிபரவச் செய்துள்ளார். புதுக்குரல் சஞ்சிகையை என்பத்தாறில் வெளியிட்டுள்ள அதன் ஆசிரியருமாவார்.

சிக்கலில்லா படிமத்தில் எவரும் புரிந்து கொள்ளும் படியாக சுதந்திரமாக எழுதுபவர். இவர் இலங்கை வங்கியில் அதிகாரியாக பணிபுரிகிறார்.

- பாலமுனை பாறூக் -

செலக்ஷன் ஓப்செற் ~ அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org